**செய்தி வெளியீடு எண்: 767** **நாள்: 12.06.2024**

**செய்தி வெளியீடு**

**குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு இன்று (12.06.2024) சென்னையில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு சி.வெ.கணேசன், அவர்கள் தலைமையில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின நிகழ்ச்சி நடைபெற்றது.**

குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12–ம் தேதி உலக அளவில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி தொழிலாளர் துறையின் சார்பாக இன்று (12.06.2024) சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் அனுசரிக்கப்படுகிறது.

இன்றைய தினத்தில் மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி, சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக விழா அரங்கத்தில், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருசி.வெ. கணேசன், அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது. முன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இப்பேரணியில் கரகாட்டம், பறையாட்டம் மற்றும் மரக்கால் ஆட்டம் போன்ற கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான கையெழுத்து இயக்கம் துவக்கிவைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக உறுதிமொழி எடுக்கப்பட்டது. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்தான விழிப்புணர்வு குறும்படம் வெளியிடப்பட்டது. குழந்தைத் தொழிலாளர் முறையிலிருந்து மீட்கப்பட்டவர்கள் அவர்களது அனுபவங்களை பகிர்ந்தனர். இந்நிகழ்ச்சியில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் சிறப்பாக பணிபுரிந்த கள அலுவலர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு கேடயம்

வழங்கப்பட்டது. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்த விழிப்புணர்வு ஒரு நிமிட குறும்படம் மற்றும் ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற கல்லூரி மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது, குழந்தைகள் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிக்கும் வகையிலும் பெற்றோர்களின் சிரமங்களை குறைக்கும் வகையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காலை உணவுத்திட்டம், நான் முதல்வன் திட்டம், முட்டையுடன் கூடிய சத்தான மதிய உணவு, பள்ளி மாணவர்களுக்கு இலவச பேருந்து வசதி திட்டம் போன்றவற்றை மாணவர்களுக்கு வழங்கி பெருமை சேர்த்துள்ளார். மேலும் கல்லூரி மாணவிகள் பயன் பெறும் வகையில் புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்கியும் கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் புதிய திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைங்கிணங்க மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், 2025ம் ஆண்டுக்குள் குழந்தைத் தொழிலாளர் இல்லாத தமிழ்நாட்டினை உருவாக்கிட அனைவரும் ஒன்றுபட்டு செயல்படுவோம் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு குமார் ஜெயந்த், இ.ஆ.ப., முதன்மை செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த்,இ.ஆ.ப., திரு மு.வே. செந்தில் குமார், இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், தொழிலாளர் துறை உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in